
# ஓ தீமோத்தேயுவே - பாகம் 01



புதிய ஏற்பாட்டில் **1 மற்றும் 2 தீமோத்தேயு** ஆகிய புத்தகங்கள், ஒரு தனி மனிதருக்கு எழுதப்பட்ட நிருபமானாலும், அதில் இருக்கும் ஆவிக்குரிய முத்துக்கள் அதிகமாகும். தீமோத்தேயு என்னும் தன் உடன் ஊழியருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் ஆலோசனைகள், புத்திமதிகள், வழி நடத்துதல்கள் ஆகியவை, அவருக்கு மட்டுமல்ல, சபை விசுவாசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள் என சபையின் அனைத்து அங்கத்தினருக்கும் பொருந்தும். எனவேதான் தனிமனித நிருபமாயினும், பரிசுத்த ஆவியானவரால் இப்புத்தகங்கள் புதிய ஏற்பாட்டு வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. அப்போஸ்தலராகிய பவுல், தீமோத்தேயுவை தன் ஆவிக்குரிய பிள்ளையை போல் எண்ணி, அவரோடு இணைந்து செய்த ஊழியமும், தீமோத்தேயுவை பற்றி அப்போஸ்தனாகிய பவுல் கூறும் சாட்சியும், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலும், இன்னும் அப்போஸ்தலராகிய பவுல் சபைகளுக்கு எழுதின பல நிருபங்களிலும் காணலாம். குறிப்பாக **1 மற்றும் 2 தீமோத்தேயுவில்**, அப்போஸ்தலக்கிய பவுல் தீமோத்தேயுவிற்கு கூறும் காரியங்கள், இன்று நமக்கும் மிகவும் பிரயோஜனமாய் உள்ளது. அவற்றை ஒவ்வொன்றாய் நாம் இப்பொழுது தியானிப்போமாக.

**1 தீமோத்தேயு 1:2** இல், **"விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக."**. இங்கு பவுல் தன் நிருபத்தை தொடங்கும் பொழுதே, தீமோத்தேயுவிடம் காணப்பட்ட உத்தம விசுவாசத்தை பற்றி கூறுகிறார். ஆம், இங்கு முதலாவது நாம் தீமோத்தேயுவை பற்றி அறிந்து கொள்வது, அவர் தேவன் மேல் வைத்த விசுவாசத்தில் உத்தமமாய் இருந்தார். **யோபு 1:1** கூறுகிறது **"ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து,**

**பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். **“. ஆம், பழைய ஏற்பாட்டில் யோபு பெற்றதைப் போன்ற ஒரு சாட்சியை, இங்கு தீமோத்தேயுவும் பெறுகிறார். இரண்டாவது, பவுல் பல நிருபங்களில் கூறியது போல, இங்கும் தீமோத்தேயுவை, குமாரன் என்று கூறி தன் நிருபத்தை துவங்குகிறார். அப்போஸ்தலராகிய பவுல், தீமோத்தேயுவை ஊழியத்தில் பயன்படுத்தியது மட்டுமல்ல, அவருக்கு ஆவிக்குரிய தகப்பனாகவும் இருந்து அவரை ஆண்டவருக்குள் வளர்த்தெடுத்தார்.

**1 தீமோத்தேயு 1:3** இல், **“வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும், நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக,**“. இங்கு ஆதி அப்போஸ்தல காலத்திலேயே சபைக்குள் நுழைந்த வேற்றுமையான உபதேசங்களுக்கும், வீணான தர்க்கங்களுக்கும், ஜாக்கிரதையாக இருக்கும் படியாகவும், அதை மற்றவர்களுக்கும் கட்டளையிடும்படியாகவும் கூறுகிறார். ஆம், ஒரு உத்தம ஊழியனின் முதலாவது கரிசனை, சபையார் சத்தியத்தில் நிலைநிற்கவும், அந்த சத்தியத்திற்கு எதிராக வரும் சகல கள்ள உபதேசங்களுக்கும் விலகி இருக்கவும், அவர்களை எச்சரிப்பதே. அதைக் குறித்து மேலும் அப்போஸ்தலராகிய பவுல் **1 தீமோத்தேயு** முதலாம் அதிகாரம் முழுவதிலும் விவரிக்கிறார். **1 தீமோத்தேயு 1:18** இல், **“குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.**“. இங்கு **உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே** என்பது, தீமோத்தேயுவை பற்றிய ஒரு தேவத்திட்டம் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதையும், அதற்கேற்றவாறு இப்படிப்பட்ட பொல்லாத கள்ள உபதேசங்களுக்கு விரோதமாய், நல்ல போராட்டம் பண்ணும் படியாகவும், மேலும் விசுவாசமும், நல் மனசாட்சியும் உடையவராய் இருக்கும்படியாகவும் புத்தி சொல்கிறார். இவ்வாறு அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுவதற்கான காரணத்தை அடுத்த இரண்டு வசனங்களில் விளக்குகிறார். **“இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்.“ (1 தீமோத்தேயு 1:19,20**). ஆம் நல்மனசாட்சியை தள்ளி விடுவது என்பது பாவத்திற்கு இடமளிக்கும். நாளடைவில் அது பாவ சகதியில் நம்மை மூழ்கடித்து விடும். பழைய ஏற்பாட்டில் சாலொமோனுக்கும், புதிய ஏற்பாட்டில் அனனியா சப்பீராளுக்கும் இதுவே நேரிட்டது. மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ள இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்களே. இப்படிப்பட்டவர்களின் மூலம் சபையாரும் வஞ்சிக்கப்பட்டு போகாதபடி, அவர்களை எச்சரிக்கவும், தானும் எச்சரிக்கையாக இருக்கவும், அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவிற்கு அறிவுரை கூறுகிறார்.

**1 தீமோத்தேயு 2:1** இல், **“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;“**. இங்கு இதற்கான காரணத்தை, **1 தீமோத்தேயு 2:2** இல், **“நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.“**, என்று அப்போஸ்தலராகிய பவுல் கூறினாலும், முக்கியமான காரணத்தை **1 தீமோத்தேயு 2:4** இல், **“எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.“**, என்று கூறுகிறார். ஆம் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் வாழ மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதரும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகிய இரட்சிப்பை கண்டடையவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவுமே, நாம் ஒவ்வொருவருக்காக வேண்டுதல் செய்ய வேண்டும்.

**1 தீமோத்தேயு மூன்றாம் அதிகாரத்தில்**, சபையில் கண்காணியானவர்கள், உதவிக்காரராய், ஊழியம் செய்பவர்கள் எப்படிப்பட்ட தகுதி உடையவராய் இருக்க வேண்டும் என்பதை தீமோத்தேயுவுக்கு கூறும் அப்போஸ்தலராகிய பவுல், அதற்கான காரணத்தை, **1 தீமோத்தேயு 3:14,15** வசனங்களில், **“நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.“** என்று கூறுகிறார். இங்கு தெளிவாக ஒரு சபை தேவனுடைய வீடாய் எப்படி இருக்க வேண்டும் என்பதை தெளிவாக கூறுகிறார். ஏனெனில் அந்த வீடே, ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. ஆம், ஆதி அப்போஸ்தலர்கள் ஒரு பக்கம் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும், சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் என்ற வாஞ்சையோடு எவ்வாறு ஊழியம் செய்தனரோ, அத்தனை ஜாக்கிரதையாய் அவ்வாறு இரட்சிக்கப்பட்டு தேவனுடைய வீட்டில் அங்கமாய் இருப்பவர்கள், அந்த சத்தியத்திற்கு ஏற்றவாறு வாழ வேண்டும் என்பதிலும் ஜாக்கிரதையாக இருந்தனர். மேலும் **1 தீமோத்தேயு 4:6** இல், **“இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்.“**. எனவே ஒரு நல்ல ஊழியக்காரனுக்குரிய தகுதி, முதலாவது தன் சபை மக்களை சத்தியத்தில் நடத்த வேண்டும், மேலும் துர் உபதேசங்கள், சத்தியத்திற்கு விரோதமான காரியங்கள் நுழைந்து விடாதபடி காக்க வேண்டும் என்பதை அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவுக்கு ஆணித்தரமாக விளக்குகிறார். மேலும், சபையை எப்படி நடத்த வேண்டும் என்ற ஆலோசனைகளை கூறிய பின்பு, அதை நடத்துகிற இளம் ஊழியரான தீமோத்தேயு எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதையும் அவருக்கு கூறுகிறார். **1 தீமோத்தேயு 4:12,13** வசனங்களில், **“உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு**

**மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. “**. முதலாவது, இளம் வயது உடையவராய் இருக்கும் தீமோத்தேயுவை, அவரது வாலிபத்தை குறித்து, அனுபவ முதிர்ச்சியை குறித்து யாரும் கேள்வி கேட்க முடியாதபடி, அவரை அசட்டை பண்ணாதபடி, **வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு** என்கிறார். ஆம், தன்னுடைய கையில் ஆண்டவர், தேவனுடைய சபையாய் கொடுத்திருக்கின்ற சபை விசுவாசிகள் அனைவரும் முன்பும், ஆவிக்குரிய ரீதியிலும், சரீர பிரகாரமாகவும் ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை வாழ வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

மேலும் **1 தீமோத்தேயு 4:14** இல், **“மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே.“**. ஆம் ஆண்டவர் அவருக்கென்று வரத்தை ஊழியத்தில் கொடுத்திருக்கிறார். அந்த வரத்தை குறித்து அசதியாயிராமல், அதை சரியாய் பயன்படுத்தினால், ஐந்து தாலந்தை வாங்கினவன் அதை பத்தாய் மாற்றினது போல, ஆண்டவருடைய சபைக்கு அது பிரயோஜனமாக இருக்கும். மேலும் **1 தீமோத்தேயு 4:15** இல் **“நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு.“**. இங்கு **நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி** என்பது, தீமோத்தேயு உத்தம ஊழியனாய், பிறருக்கு முன்பாக சாட்சி உள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இவ்வாறு செய்வது மூலம், **“உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.“** (**1 தீமோத்தேயு 4:16**). ஆம், எந்த ஊழியனும், குறிப்பாக சபையை நடத்துகிறவன், தன்னையும் தன் சபையையும் தேவனுக்குள்ளாக காத்துக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். தன்னை காத்துக் கொண்டு, சபையை காக்க தவறினால், ஆண்டவருக்கு அவன் அதற்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஏனெனில் அதற்கான வரத்தையும், கிருபையையும் தேவன் அவனுக்கு அருளியிருக்கிறார். ஒருவேளை தன்னை காத்துக் கொள்ள தவறுவானால், அது சபையாருக்கு முன்பாக அவனுடைய சாட்சியை இழக்க செய்து, சபை மக்களும் இடறுவதற்கு காரணமாகும். இதுவே பழைய ஏற்பாட்டில் ராஜாக்கள் காலத்தில் நடந்தது. எனவே இவ்விரண்டையும் பவுல் தீமோத்தேயுவிற்கு வலியுறுத்தி கூறுகிறார். மேலும் **1 தீமோத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில்**, விதவைகள் எப்படி விசாரிக்கப்பட வேண்டும், அவர்களுக்கான தகுதி என்ன என்பதையும், பவுல் தீமோத்தேயுவிற்கு விளக்குகிறார். காரணம் ஆதி திருச்சபை உருவான காலத்தில், சபையில் முதலாவது எழுந்த பிரச்சனை, விதவைகள் சரியாய் விசாரிக்கப்படவில்லை என்பதுதான் (**அப்போஸ்தலர் 6:1**). மேலும், **1 தீமோத்தேயு 5:17** இல், “**நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.**“. இங்கு மூப்பர் ஊழியத்தை வாஞ்சையாய்,

ஜாக்கிரதையாய் திருவசனத்தின் மூலம் செய்வேரை எப்படி கனம் பண்ண வேண்டும் என்பதை தீமோத்தேயுவிற்கு கூறும் பவுல், அதே நேரத்தில், **“மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுமூக்கொள்ளக்கூடாது.“ (1 தீமோத்தேயு 5:19).** என்றும் கூறுகிறார்.

மேலும், **1 தீமோத்தேயு 5:20,21** வசனங்களில், **“மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள். நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும், விசாரிக்குமுன் நிருணயம்பண்ணாமலும், இவைகளைக் காத்து நடக்கும்படி, தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக, உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்.“.** இங்கு சபையில் உருவாகும் பிரச்சனைகளை, எவ்வாறு ஜாக்கிரதையாய் கையாள வேண்டும் என்பதை, அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவிற்கு கூறுகிறார். ஆம், ஒருவரை குறிப்பாக சபையில் மூப்பராய் இருப்பவர்களுக்கு விரோதமாக கூறப்படும் காரியங்களை ஜாக்கிரதையாய் விசாரிக்க வேண்டும் என்பதையும், அதே நேரத்தில் சபைக்கு விரோதமாய், துணிகரமாய் பாவம் செய்பவர்களை, எவ்வித பட்சபாதமும் இல்லாமல், எல்லாருக்கும் முன்பாக கடிந்து கொள்ள வேண்டும் என்பதையும் கூறுகிறார். மேலும், **1 தீமோத்தேயு 5:22** இல், **“ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்.“.** எனவே யாரையும், காரணம் இல்லாமல் நியாயம் தீர்க்கக் கூடாது என்பதையும், தன்னை யாரும் நியாயந்திற்காதபடி காத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். **1 தீமோத்தேயு 5:23** இல், **“நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்.“.** இங்கு பவுல் தீமோத்தேயுவின் சரீர சுகத்தின் மீது அக்கறை உடையவராய், ஒரு தகப்பனை போல அறிவுரை கூறுகிறார். ஆம், ஒரு ஊழியன் தன் சரீரத்தையும் பெலனுள்ளதாக, சுகம் உள்ளதாக காத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், ஊழியத்தை ஜாக்கிரதையாய், நேர்த்தியாய் செய்ய அது உதவும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

மேலும் **1 தீமோத்தேயு ஆறாம் அதிகாரத்தில்,** எவ்வாறு துர்உபதேசங்களும், துர்மனசாட்சியும் சபைக்கு இடறலாய் இருக்கிறதோ, அதேபோல் பண ஆசையும், உலக சுகபோக காரியங்களும், மனுஷரை கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்தும் என்பதை கூறும் பவுல், **“நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.“ (1 தீமோத்தேயு 6:11),** என்று அறிவுரை கூறுகிறார். மேலும் **1 தீமோத்தேயு 6:12** இல், **“விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்.“.**

மேலும், **1 தீமோத்தேயு 6:17-19** வசனங்களில், **“இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.“**. ஐஸ்வர்யம் உடையவர்கள், அதை எவ்வாறு சபைக்கும், தங்களுக்கும் தேவை உள்ள மற்றவர்களுக்கும், பிரயோஜனம் உண்டாகும்படியாய் கையாள வேண்டும் என்பதையும், அதுவே நித்திய ஜீவனுக்கு நல்ல ஆதாரமாய் இருக்கும் என்பதையும் பவுல் கூறுகிறார். இறுதியாக, **“ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள். கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக. ஆமென்.“ (1 தீமோத்தேயு 6:20,21)**, என்று கூறி முடிக்கிறார்.

மேற்கண்ட காரியங்களின் சாராம்சத்தை நாம் காணும் பொழுது, ஊழியத்தை/சபையை நடத்துகிற ஒரு இளம் ஊழியன், தான் எவ்வாறு மந்தைக்கு மாதிரியாய், குற்றம் சாட்டப்படாதவனாய், திருவசனத்தை நன்கு போதித்து புத்தி சொல்கிறவனாய், சபையில் உள்ள விதவைகள் முதல் மற்றும் தேவை உள்ள அனைவரையும் எவ்வாறு விசாரித்து நடத்துகிறவனாய், சபையில் நுழைய முற்படும் துர்உபதேசங்களை அகற்றுகிறவனாய், சபைக்கு இடறலாய் இருப்பவரை, இனம் கண்டு களை எடுக்கிறவனாய் இருக்க வேண்டும் என்பதை காண்கிறோம். இவ்வாறு ஆலோசனைகளை கூறும் பொழுது அவர் அதை ஏற்றுக்கொள்வார் என்பதை அறிந்து தான், பவுல் ஒரு தகப்பன் ஸ்தானத்திலிருந்து இந்நிருபத்தை எழுதி உள்ளார்.

இன்றைய சபை காலகட்டத்திலும், மூத்த ஊழியர்கள், அப்போஸ்தலராகிய பவுலை போல, புதியதாக தங்களை ஊழியத்திற்கு அர்ப்பணித்துவரும், இளம் ஊழியர்களுக்கு இப்படிப்பட்ட ஆலோசனைகளை, அறிவுரைகளை வழங்க வேண்டும். அப்படி வழங்கப்படும் அறிவுரைகளை, தீமோத்தேயுவை போல இளம் ஊழியர்கள் ஏற்றுக்கொண்டு, அதை தங்கள் ஊழியத்தில் செயல்படுத்த வேண்டும். இளம் ஊழியர் எப்படிப்பட்ட திறமை உடையவராய், தாலந்துள்ளவராய் இருந்தாலும், வேதாகம கல்லூரியில் பயின்று ஆன்மீக பட்டங்களை பெற்றிருந்தாலும், தேவனோடு நடந்த மூத்த ஊழியர்களின் ஆலோசனை அவர்களுக்கு கட்டாயம் தேவை. ஆனால் இன்றைய காலகட்டத்தில், இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுவது குறைந்து வருகிறது. உண்மையான அர்ப்பணிப்போடு ஊழியத்திற்கு வரும் இளம் ஊழியர்கள், தேவன் தங்களுக்கு தந்திருக்கும், தாலந்தை சிறப்பாய் பயன்படுத்தி, ஊழியத்தை ஆரம்பிக்கின்றனர். ஆனால், சிறிது

காலத்திற்குள்ளாகவே, தன்னையே அர்ப்பணித்து செய்ய துவங்கிய ஊழியத்தை, ஒரு வியாபாரப் பொருளாக, தங்கள் இவ்வுலக வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள, சமுதாயத்தில் தங்களுக்கான ஒரு தனி நட்சத்திர அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்ள, பயன்படும் கருவியாக மாற்றி விடுகின்றனர். தேவன் தங்களுக்கு தந்த தாலந்தை தவறாக பயன்படுத்துகின்றனர். மூத்த ஊழியர்கள் சிலர் இவற்றை வெளிப்படையாய் கண்டித்து, புத்திச் சொன்னாலும், தங்கள் இருதயத்தை கடின படுத்தின பழைய ஏற்பாட்டு ராஜாக்களைப் போல், அவற்றை புறக்கணிக்கின்றனர். இன்றைய சமூக ஊடகங்கள் (Social Media) மூலம் வரும் மாயையான பிரபலத்தை கண்டு, தங்களை மேன்மையானவர்களாக, மக்கள் தங்கள் பக்கம் இருப்பதாக நினைத்துக் கொள்கின்றனர். எனவே தேவனை பிரியப்படுத்த செய்ய வேண்டிய ஊழியத்தை, மனுஷரை பிரியப்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

உலக வழிமுறைகளை ஊழியத்திற்குள்ளும் இன்னும் சபைக்குள்ளும் கொண்டு வருகின்றனர். இவை ஆரம்பத்தில் அருமையானதாக தோன்றினாலும், காலப்போக்கில் சபைக்குள்ளாக, ஊழியத்திற்குள்ளாக இவை குழப்பத்தை, துர்உபதேசத்தை ஏற்படுத்தி அனேகர் வழிவிலகி போக காரணமாகும் என்பதை அறியாதிருக்கின்றனர். கண்களின் இச்சைக்கும், மாம்சத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் தங்கள் வாழ்வில் இடம் கொடுத்து, தேவன் தங்களுக்கு தந்த அருமையான ஊழியத்தை இழந்து போகின்றனர். ஊழியத்தை இழந்துபோவதும் அல்லாமல், தனிப்பட்ட முறையில் தங்கள் வாழ்க்கையின் சாட்சியையும் இழந்து, அநேகர் இடறலடைய காரணமாகின்றனர். அவற்றையெல்லாம் நாம் இப்பொழுது கண்கூடாய் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டவருடைய சத்தத்தை கேட்டு, எத்தனையோ ஆண்டுகள் பாடுகளின் வழியாய், உண்மையும் உத்தமுமாய் இருந்து, அவருடைய ஊழியத்தை செய்த மூத்த ஊழியர்களின் வாழ்வை மாதிரியாக நோக்காமல், வியாபார தந்திரங்களை பயன்படுத்தி, வியாபாரத்தை பெருக்குவது போல, ஊழியத்தை வளர்க்க நினைக்கின்றனர். அதற்காக சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துகின்றனர். ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து, அவர் வார்த்தையை பெற்று, சித்தத்தை அறிந்து செய்ய வேண்டிய ஊழியத்தை, சமூக ஊடகங்கள் மூலம் வரும் பணத்திற்காக, Views, Comments மற்றும் Likes ஆகியவற்றிற்காக செய்கின்றனர். இதிலும் கொடுமையானது, தங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையை இழந்து, அப்போஸ்தலராகிய பவுல், தீமோத்தேயுவிடம், **உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு** என்ற எச்சரிக்கையை மறந்து, இறுதியில் ஆண்டவரை அறியாத மக்கள், கிறிஸ்தவத்தை குறித்த ஒரு தவறான புரிதலுக்கு வர காரணமாகின்றனர். இதற்கு இவர்கள் ஊழிய பாதையை தேர்ந்தெடுக்காமல் இருந்திருந்தாலே மேன்மையாக இருந்திருக்கும். இவர்களுக்கும் யூதாஸ் காரியோத்திற்கும் வித்தியாசம் இல்லை. எனவே, தேவன் தங்களுக்கு தந்த, இந்த கனமான ஊழியத்தை, அப்போஸ்தலராகிய பவுல் கூறிய ஆலோசனைகளை ஏற்று, தீமோத்தேயு செயல்பட்டது போல, தேவ வழி நடத்துதலையும், மூத்த ஊழியர்களின் ஆலோசனையையும், குறிப்பாக மேற்கண்ட **1 தீமோத்தேயுவில்** கூறும் காரியங்களையும், தங்கள் ஊழியத்தில் அப்பியாசப்படுத்தி, உண்மையும் உத்தமுமாய் தங்கள் ஓட்டத்தை முடிக்க வேண்டும். அதுவே ஆண்டவருக்கு

மகிமையை கொண்டு வரும். ஒரு கூட்ட மக்கள் அவர்கள் மூலமாய் பரலோகத்தில் பங்கடைவர். ஆண்டவர் தாமே அப்படிப்பட்ட கிருபையை, நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக. தொடர்ந்து **2 தீமோத்தேயு** புத்தகத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் ஆலோசனைகளை, அடுத்த பாகத்தில் தியானிப்போம். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென், அல்லேலுயா.